விளம்பர கட்டணம்
முழுபக்கம் - 4000
அரைபக்கம் - 2000
கால்பக்கம் - 1000
விளம்பரம் மற்றும் இதழ் தொடர்புக்கு:
9443059555

# ஆதித்தமிழன் அறிவாயுதம்

நிறுவனர் இரா.அதியமான்

AATHITHAMIZHAN ARIVAAYUTHAM

ஒடுக்கப்பட்ட மக்களுக்காக போராடும் இதழ்

வலைதளம் : www.aathithamizharperavai.com

| தனிச்சுற்றுக்கு மட்டும் | திருவள்ளுவர் ஆண்டு 2043 | மே-சூன் 2013 | இதழ் - 28 | பக்கம் 4 | நன்கொடை ரூ.5 |
|---|---|---|---|---|---|

## கள்ளர் சமூக பெண்ணை காதலித்ததால் குடும்பமே சேர்ந்து



# அருந்ததிய இளைஞரை நாக்கை வெட்டி ஆ.உறுப்பை அறுத்து கொடூரக் கொலை

## ● பார்த்திபன் குடும்பத்திற்கு மீண்டும் கொலை மிரட்டல்
## ● பாதுகாப்புவழங்க ஆட்சியருக்கு அதியமான் கோரிக்கை

நாடு சுதந்திரம் அடைந்து 66 ஆண்டுகள் ஆனாலும், இந்த அருந்ததிய சமூக மக்களுக்கு இன்னும் விடுதலை கிடைக்கவில்லை. உலகத்தை உள்ளங்கையில் அடக்கிக் கொள்ளும் அளவுக்கு கனிணியுமாகிப்போனாலும், ஆண்டாண்டாண்டு காலமாய் நீடித்துக் கொண்டிருக்கிறது. சாதித் தீண்டாமையும், கோரப்படுகொலைகளும், இன்னும் தொடர்ந்து கொண்டேதான் இருக்கிறது.

காதலுக்கு மரியாதை செய்யும் திரைப் படங்களையும், நாடகங்களையும் ஏற்றுக்கொள்கின்ற இந்த சமூகம் நிஜ வாழ்க்கையில் வரும்போது மதம் விட்டு மதமோ இனம் விட்டு இனமோ, அல்லது மேல் சாதிகளுக்குள்ளேயே. சாதி, விட்டு சாதி என மணம் முடித்தால் கூட ஏற்றுக் கொள்கிறது இந்த சமூகம்.

ஆனால் தாழ்த்தப்பட்டவன் மேல்சாதியை சார்ந்தவரை காதலித்து மணம் முடித்தால்.. கவுரவம் பாதிக்கப்பட்டதாக வக்கிர கவுரவக் கொலைகளை அரங்கேற்றிக்கொண்டே இருக்கின்றனர். இப்படி நடந்ததுதான் தருமபுரி, தஞ்சை, அவிநாசி என காதல் மணம் முடித்தவர்களுக்கு எதிராக நடந்தேறிய படுகொலைகளும் தீவைப்பு, வன்முறைச் சம்பவங்களும், நம் நெஞ்சங்களில் நெருப்பாய் எரிந்து கொண்டிருக்கும் போது அந்த நெருப்பில் மேலும் எண்ணையை ஊற்றுவது போல் இப்போது



பெரம்பலூர் மாவட்டத்தில் பார்த்தீபன் படுகொலையும் நடந்தேறியுள்ளது.

பெரம்பலூர் மாவட்டம் ஆலம்பாடி ரோடு, புதுக்காலனி பகுதியை சேர்ந்த தாழ்த்தப்பட்ட அருந்ததிய சமூகத்தை சேர்ந்த ராஜேந்திரன்-விஜயா தம்பதியின் மகன் பார்த்தீபன் என்றஇளைஞனும் இதே பகுதியில் முருக்கு வியாபாரம் செய்து பிழைப்பு நடத்தி வரும் உசிலம்பட்டி பிரமலைக்கள்ளர் சமூகத்தை சேர்ந்த பழனி என்பவரது மகள் ஒச்சம்மாள் (வயது21) என்பவரை காதலித்து கடந்த 12.4.2013 அன்று மணம் முடித்து கொண்டார். பார்த்திபன் சொந்தமாக ஐஸ்கம்பெனி வைத்து நல்ல நிலையில் சொந்தமாக வருமானம் ஈட்டி மனைவி ஒச்சம்மாளை மகிழ்ச்சியாக வைத்து குடும்பம் நடத்தி வந்துள்ளார். இதை பொறுக்க முடியாத பெண்ணின் தந்தை பழனியும், அவரது மகன் செல்வராஜ், தங்கபாண்டியன், என்பவனும், கூலிப்படையை சேர்ந்த அண்ணாமலை, குட்டி மாஸ்டர் ராஜா என்பவனும் கடந்த 5.6.2013 அன்று பார்த்தீபனை காரில் கடத்தி சென்று செங்குணம் சிறுகுடல் என்ற இடத்தில் வைத்து அரிவாள், கத்தி போன்றகோர ஆயுதங்களைக் கொண்டு கீழ்பக்க தாடையை வெட்டிநாக்கை துண்டித்து, ஆணுறுப்பை நறுக்கியும் கோரமான முறையில் படுகொலை செய்துள்ளனர்.

பார்த்திபன் படுகொலையான தகவல் அறிந்து பார்த்தீபனின் தாய், தந்தை மற்றும் சகோதரிகள் வனிதா, பிரியா, ஆகியோர் சம்பவத்தை நேரில் பார்த்து கதறி அழுது பயத்தில் மீளா துயரத்தில்

### தட்டிக்கேட்க நாதியில்லை

இந்த கோரமான படுகொலையை தட்டிக்கேட்ட தீண்டாமை ஒழிப்பு முன்னணி மற்றும் ஆதித் தமிழர் பேரவை தவிர வேற எந்த கட்சியும் முன்வரவில்லை. ஓட்டுக்காக வருவார்கள். இதே கொடுமை மற்ற ஆதிக்க சாதி இந்து களுக்கு நடந்திருந்தால் என்ன வாயிருக்கும் சிந்தித்து பாருங்கள்?... பொது சொத்து சேதமடைந்திருக்கும். அரசியல் தலைவர்களும், மீடியாக்களும் குவிந்திருப்பார்கள்.

2-ம் பக்கம் பார்க்க

# பார்த்திபன் கொலையை பார்த்து உறைந்துபோய் பீதியில் இருக்கும் அவரது குடும்பம்





பார்த்திபன் குடும்பத்திற்கு அதியமான் நேரில் சென்று ஆறுதல் கூறினார். அப்போது அவரது தந்தை எங்கள் பிள்ளைகளுக்கு பாதுகாப்பு இல்லையென்று அதியமானிடம் கண்ணீர்மல்க கதறினார்.

உறைந்து போயுள்ளனர். பலியான குடும்பத்திற்கு இதுவரை எந்தவித பாதுகாப்பும் வழங்கப்படவில்லை. மரண பயத்துடன் குடும்பமே பீதியில் உள்ளது.

## அதியமான் நேரில் ஆறுதல்

இச்சம்பவம் அறிந்து பேரவையின் நிறுவனர் அதியமான் பார்த்திபன் குடும்பத்திற்கு நேரில் சென்று ஆறுதல் கூறினார். உடன் பொதுச் செயலாளர் மற்றும் திருச்சி மாவட்ட நிர்வாகிகள் அருந்ததி மைந்தன் சோழன் மற்றும் மாவட்ட நிர்வாகிகள் ரமணா,தில்லை, சரவணன், உதயன் ஆகியோர் அவர்களிடம் விசாரணை செய்து பின்னர் காவல் துறையினரிடம் புகார் அளித்தன் பேரில் இந்த கொலை வழக்கை மருவத்தூர் காவல்நிலையம் குற்ற எண்.117/2013 பிரிவு 302 இந்திய தண்டனை சட்டம் மற்றும் தாழ்த்தப்பட்டோர்-பழங்குடியினர் வன்கொடுமைதடுப் புச்சட்டம் 1998 பிரிவு 312/5 ஆகியவற்றின் கீழ் வழக்கு பதிவு செய்து கொலையாளிகள் பழனியையும் அவர் மகன் செல்வ ராஜை மட்டும் கைது செய்துள்ளனர்.

பார்த்திபனின் படுகொலைக்கு உடந்தையாக இருந்த அண்ணாமலை, குட்டிமாஸ்டர், ராஜா தங்கபாண்டியன் ஆகியோரையும் உடனே கைது செய்ய வேண்டும். கொலையாளிகள் பார்த்திபனின் குடும்பத்தையே மீண்டும் கொலை செய்வதாக மிரட்டல் விடுத்துள்ளனர். எனவே பார்த்திபனின் குடும்பத்திற்கு கலெக்டர் பாது காப்பு பாதுகாப்பு அளிக்க வேண்டும்.

பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு வன்கொடுமை தடுப்புத் சட்டத்தின்கீழ் வழங்க வேண்டிய நிவாரணத்தொகையை உடனே வழங்க வேண்டும். வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் இறந்தவரின் குடும்பத்தினருக்கு ஒருவருக்கு உடனே அரசு வேலை வழங்க வேண்டும்.

அந்த பகுதியில் தாழ்த்தப்பட்ட வகுப்பை சார்ந்தவர்கள் நான்கு குடும்பங்கள் மட்டுமே வசித்து




பெரம்பலூர் பார்த்திபன் கொலைக்கு நீதிகேட்டும், அவரது குடும்பத்திற்கு பாதுகாப்பு வழங்கிடவும் பேரவையின் நிறுவனர் அதியமான் கண்டன உரையாற்றினார். ஆர்ப்பாட்டத்தில் பொதுச்செயலாளர் நாகராசன், தோழர் அருந்ததி மைந்தன், திருச்சி, பெரம்பலூர் மாவட்ட நிர்வாகிகள் மற்றும் ஏராளமான ஆதித்தமிழச்சிகள் கைக் குழந்தையுடன் கலந்து கொண்டனர்.

வருவதாலும், சாதி இந்துக் கள், பெரும்பான்மையாக இருந்து கொண்டு மிரட்டி வருவதாலும், படுகொலையான பார்த்தீபன் குடும்பத்தாருக்கு உயிர் உடைமைகளுக்கு பாதுகாப்பு வழங்க கோரியும், குற்றவாளிகளை கைது செய்து தக்க தண்டனை வழங்கக் கோரியும் அவரது குடும்பத்திற்கு பாதுகாப்பு வழங்கிடவும் ஆதித்தமிழர் பேரவை சார்பில் கண்டன ஆர்ப் பாட்டம் நடைபெற்றது. இதில் நிறுவனர் அதியமான், பொதுச்செயலாளர் நாகராசன், பெரம்பலூர், திருச்சி மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## அதியமான் கண்டன உரை

ஆர்ப்பாட்டத்தில் நிறுவனர் அதியமான் பேசுகையில்:- காதல் சாதி பார்த்து, மதம் பார்த்து வருவதில்லை. இருவரும் மனம் விரும்பி திருமணம் செய்து கொள்ளும் காதல் திருமணத்தை சாதி எனும் பெயர் சொல்லி இரண்டு பேரையும் பிரித்தும் பெண்ணையோ அல்லது காதலனையோ கவுரவ வக்கிர கொலை செய்து விடுகிறார்கள். தமிழகத்தில் அருந்ததிய மக்களுக்கு பாது காப்பு இல்லை, தொடர்ந்து தாக்கப்பட்டும், படு கொலை செய்யப்பட்டும் வருகிறார்கள், குற்றவாளிள் மீது புகார் கொடுத் தால் காவல்துறை நடவடிக்கை எடுக்க மறுக்கிறார் கள். அரசும் வேடிக்கை பார்த்துக்கொண்டி ருக்கிறது. இந்நிலை தொடரு மேயானால் தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்கெடும் வாய்ப்புள்ளது.

### திருமணம் முடிந்த மறுநாளே கல்லூரி மாணவி கொலை

# குலாளர் சமூக இளைஞரை திருமணம் செய்து கொண்டதால் அருந்ததிய கல்லூரி மாணவி அடித்து கிணற்றில் வீச்சு

சேலம் மாவட்டம், மல்லூர் அருகிலுள்ள வாணிம்பாடி கிராமத்தைச் சேர்ந்த அருந்ததிய கல்லூரி மாணவி பிரியங்காவும், குலாளர் சமூகத்தை சேர்ந்த கட்டிட தொழிலாளி மூர்த்தியும் காதலித்து வந்துள்ளனர். இவர்களது காதல் விவகாரம் இருவீட்டாருக்கும் தெரியவந்தது. இதனால் இரு வீட்டாரும் காதலுக்கு தடை போட்டனர். இதற்கிடையே காதலர்கள் இருவரும் 29-05-13 அன்று நண்பர்களின் உதவியுடன் கஞ்சமலை சித்தர் கோவிலில் திருமணம் செய்து கொண்டனர். பின்னர் இருவரும் மூர்த்தியின் வீட்டிற்கு சென்றுள்ளனர். இதனைப் பொறுக்க முடியாத மூர்த்தியின் தந்தை தந்தை தர்மலிங்கம், திருமணம் முடிந்த மறுநாளே மோகன்குமார் என்றரவுடிகளின் மூலம் பணத்தை கொடுத்து கூலிப்படையை ஏவி பிரியங்காவை கடத்தி சென்று படுகொலை செய்து வாணியம்பாடி ஏரி அருகே உள்ள கிணற்றில் வீசியுள்ளனர். தகவலறிந்த போலீசார் உடலை கைப்பற்றி விசாரணை நடத்தினர். தந்தை



திட்டியதால் அவர் தற்கொலை செய்து கொண்டார் என பொய் வழக்கு புனைந்துள்ளனர்.



திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரத்தில் செயற்குழு கூட்டம் நடைபெற்றது. இதில் மாவட்ட மகளிரணி தலைவி குயிலி பேசினார். உடன் நிறுவனர், பொதுச்செயலாளர், தோழர் பெருமாவளவன் மற்றும் மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**நாமக்கல் மாவட்டத்தில் பிளஸ்-2 தேர்வில் அதிக மதிப்பெண் எடுத்தும் டக்டருக்கு படிக்க வசதியில்லாமல் தவிக்கும் அருந்ததிய மாணவி பிரேமா**

மாணவி எடுத்த மதிப்பெண்
தமிழ்-193,ஆங்கிலம்-183,
கணிதம்-199,இயற்பியல்-196,
வேதியில்-198, உயிரியல்-199

**உதவும் உள்ளங்கள் அழைக்கவும்:**
**9600751696**



## நெல்லை மேலப்பாளையம் 30-வது வார்டில்
# அடிப்படைவசதிகள் செய்துதரக்கோரி சமையல் செய்து நூதன போராட்டம்

நெல்லை மாநகராட்சி மேலப்பாளையம் மண்டலத்திற்குப்பட்ட 30-வது வார்டு பகுதியில் வசிக்கும் துப்பரவு பணியாளர்கள் குடியிருப்பு பகுதியை சேர்ந்த அருந்ததியின மக்களுக்கு அடிப்படை வசதிகள் ஏதும் இல்லை மாநகராட்சி நிர்வாகத்திடம் புகார் செய்தும் பலன் இல்லை. இதனால் நெல்லை மாநகராட்சி அலுவலகம் முன்பு பேரவையின் செயலாளர் இளஞ்செழியன் தலைமையில் சமையல் செய்து நூதன போராட்டத்தில் ஈடுபட்டனர், இதனால் அங்கு சிறிது பரபரப்பு நிலவியது காவல் துறைஅதிகாரிகள் வந்து போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர்.போராட்டத்தில் ஆண்களும், பெண்களும் மற்றும் பேரவை நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.

## ராமநாதபுரம் சாயல்குடியில்
# குடிநீர் கேட்டு சாலைமறியல் ஆ.த.பேரவையினர் 27 கைது

சாயல்குடி,சூன்.18- சாயல்குடி பேரூராட்சியில் அனைத்து வார்டுகளுக்கும் தினமும் குடிநீர் விநி யோகம் செய்யவேண்டும், எம்.ஜி.ஆர் ஊருணியை தூர்வாரி சுற்றுச்சுவர் அமைக்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி சாயல்குடி மும்முனை சந்திப்பில் சாலை மறியல் ஈடுபட்டனர். தகவல் அறிந்த போலீசார் 27 பேரவையினரை கைது செய்தனர். ஆர்ப்பாட்டத்திற்கு பேரவையின் மாவட்ட செயலாளர் தமிழ்மாறன் தலைமை வகித்தார். மாவட்ட அமைப்பாளர் கதிரவன், கடலாடி ஒன்றிய துணைச்செயலாளர் பகலவன். மாவட்ட கொள்கைபரப்புச் செயலாளர் பாண்டியன், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பாஸ்கரன் மற்றும் ஏராளமான பேரவை தோழர்கள் கலந்து கொண்டனர்.

## திருப்பூரில் பேரவை செயற்குழு கூட்டம்
# தனிசுடுகாடு-இரட்டை குவளை முறையை ஒழிக்கவேண்டும்
## செயற்குழு கூட்டத்தில் தீர்மனம்

திருப்பூர் மாவட்டத்தில் ஒன்றிய பேரவையின் செயற்குழு கூட்டம் நடைபெற்றது. இதில் ஒன்றிய செயலாளர் சாமிநாதன் தலைமை வகித்தார். கூட்டத்தில் நடைபெற்ற தீர்மானம்:
வரும் 2013 செப்டம்பர் 7,8 தேதிகளில் திருப்பூர் மாவட்டம், தாராபுரத்தில் மதுரைவீரன் வரலாறு மீட்பு அரசியல் மாவட்ட மாநாடு மற்றும் பேரவையின் பெயர் பலகை திறப்பு விழா மற்றும் கொடியேற்று விழா நடைபெறஉள்ளது. இதில் பாப்பன்குளம், ரெட்டியாபாளையம், குளத்துப்பாளையம், என்.ஜி.புதூர், ருத்ரபாளையம், கொழுமம், போளரப்பட்டி ஆகிய ஊர்களிலிருந்து மாநாநட்டில் பேரவை தோழர்களும், ஆதித்தமிழர்களும் திரளாக கலந்து கொள்வது என்று தீர்மானிக்கப்பட்டது.

2. வன்கொடுமை தடுப்புச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தவேண்டும். மாவட்டந்தோரும் வன்கொடுமை நீதிமன்றங்கள் அமைக்கவேண்டும். 2. தனி சுடுகாடு, இரட்டை குவளை முறையை உடனே தமிழக அரசு கவனம் செலுத்தி ஒழிக்க வேண்டும்.
3. அருந்ததியர்களுக்கு கொடுக்கப்பட்ட இட ஒதுக்கீட்டை கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் அரசியல், நடைமுறைப்படுத்த சொல்லி மத்திய, மாநில அரசுகளை செயற்குழு வலியுறுத்துகிறது. போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.
கூட்டத்தில் தர்மராசு, கருப்பசாமி, மற்றும் முருகன், கனகராசு, மேற்கு முருகானந்தம், மணிவாசகம், மாரியப்பன், ராஜீ ஆகியோர் முன்னிலை வகித்தனர். தங்கவேல் திருப்பூர் மாவட்ட அமைப்பு செயலர் ராஜேந்திரன், மாவட்ட இளைஞர் அணி ஆதித்தமிழன் மடத்துக்குளம் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். மற்றும் பேரவை

## இளவரசன் மரணம் தற்கொலை அல்ல;
# சி.பி.ஐ விசாரணை வேண்டும் ஆதித்தமிழர் பேரவை வலியுறுத்தல்

ஈரோடு தெற்கு மாவட்ட ஆதித்தமிழர் பேரவையின் அமைப்பு செயலாளர் அறிவழகன் பத்திரிக்கை பேட்டியளித்தார் அதன் விவரம்:- தர்மபுரி மாவட்டம் நத்தம் காலினியை சேர்ந்த இளவரசன் வேறு ஒரு சமூகத்தை சேர்ந்த பெண் திவ்யாவும் காலித்து திருமணம் செய்து கொண்டனர்.

இந்நிலையில் அவமானம் தாங்காமல் திவ்யாவின் பெற்றோர் தற்கொலை செய்து கொண்டார். மனமுடைந்த திவ்யா அவரது தாயாரிடம் இருந்து வந்தார். இளவர சனிடம் திவ்யா எனது அப்பாவும் இறந்து விட்டார். அம்மாவுக்கு ஆறுதலாக இருக்க செல்கிறேன். என்று இளவரசனிடம் தெரிவித்ததாக கூறப்படுகிறது.

இதனால் மன உலைச்சலில் இருந்தார். இளவரசன் சம்பவத்தன்று அவரது அப்பாவை பார்த்து விட்டு எடிஎம்-ல் பணத்தை எடுத்துக்கொண்டு அவரது பைக்கில் வீட்டு போகிறேன் என்று அப்வாவிடம் சொல்லிவிட்டு வந்துள்ளார். பிறகு ரெயிலில் அடிப்பட்டு தற்கொலை செய்து கொண்டார் என அவர பெற்றோருக்கு தகவல் வருகிறது. தற்கொலை செய்து கொண்டால் உடல் துண்டு, துண்டாக போயிருக்கும் அல்லது உடல் முழுவதும் சிதைந்து போயிருக்கவேண்டும். அல்லது பல மீட்டர் தூரம் வீசப்பட்டிருக்க வேண்டும். அப்படி எதுவும் நடக்கவில்லை. அவரது தலையில் மட்டும் அடிப்பட்டு ரத்த கசிவு ஏற்பட்டு உள்ளது. எனவே இந்த இளவரசன் தற்கொலை செய்யவில்லை. யாரோ அடித்து கொலை செய்துள்ளனர். எனவே சாவில் மர்மம் இருக்கிறது எனவே இந்த வழக்கை சி.பி.ஐ. விசாரணை நடத்த வேண்டும் என ஆதித்தமிழர் பேரவையின் சார்பாக கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அவர் பேட்டிய ளித்தார்.




சாயல்குடியில் அடிப்படை வசதிகளை நிறைவேற்றாத பேரூராட்சியை கண்டித்து பேரவையினர் சாலைமறியல் போராட்டம் நடத்தினர்.




நெல்லை குருவிகுளம் துர்கா காலனியில்மற்ற தலித் சமூக மக்கள் இங்கு கொடி யேற்றக்கூடாது என்று எதிர்ப்பு தெரிவித்தனர். இதனால் காவல்தோழர் கலைக்கண்ணனிடம் நீண்ட நேரம் வாக்கு வாதத்தில் ஈடுபட்டனர். பின்னர் காவல்துறையினர் பேச்சுவார்த்தைக்கு பின் ஆதித்தமிழர் பேரவையின் கொடியேற்று விழா நடந்தது.





மதுரைவீரன் வரலாறு மீட்பு அரசியல் எழுச்சி மாநாடு திருசெங்கோட்டில் 30-6-13 அன்று நடைபெற்றது. இதில்பேரவை நிறுவனர் அதியமான் உரையாற்றினார்.

# அடக்குமுறைகளை தகர்தெறிந்த மதுரைவீரன் வரலாறு மீட்பு மாநாடு

## மக்களை அச்சுறுத்த 4மாவட்ட போலீசார் பாதுகாப்பு: மீறி குவிந்த மக்கள்

## கொளத்தூர்மணி, கே.எம்.செரீப், அருணன், ரத்தினம் ஆகிய தலைவர்கள் பங்கேற்பு:

திருச்செங்கோடு,சூலை.30- திருச்செங்கோட்டில் ஆதித் தமிழர் பேரவை சார்பில் மதுரைவீரன் உண்மை வரலாற்றுமீட்பு அரசியல் எழுச்சி மாநாடு 30-6-13 அன்று நடைபெற்றது. இந்த மாநாட்டை நடத்த மாவட்ட நிர்வாகம் அனுமதி அளிக்க மறுத்தது. பிறகு நீதிமன்ற ஆணைப்படி நடந்தது. மாநாட்டை தடுப்பதற்கும், மக்களை அச்சுறுத்துவதற்கும் 4 மாவட்ட காவல்துறையினரை பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். அதை மீறி அருந்ததிய மக்கள் கலந்து கொண்டனர்.

இம்மாநாட்டில் திராவிடர் விடுதலை கழக தோழர் கொளத்தூர்மணி, திராவிடர் விடுதலை கழகம், தோழர் கே.எம். செரீப், தமிழக மக்கள் சனநாயக கட்சி, பேராசிரியர் தோழர் அருணன் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம் மற்றும் ஜோசப் டிசோசா அகில இந்திய கிறிஸ்தவ குழு தலைவர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

மாநாட்டிற்கு நிறுவன தலைவர் அதியமான் தலைமை வகித்தார். மாவட்ட செயலாளர் தமிழரசு வரவேற்றார். பொதுச்செயலாளர் நாகராசன் துவக்கவுரையாற்றினார். மதுரைவீரன் உண்மை வரலாறு என்ற நூலை அதியமான் வெளியிட, திராவிடர் கழக மாநில தலைவர் கொளத்தூர் மணி நூலை பெற்றுக் கொண்டார்.

### அதியமான் பேச்சு

மாநாட்டில் நிறுவன தலைவர் அதியமான் பேசுகையில்:- முதல் சாதிஒழிப்பு போராளி, சமத்துவ போராளி மதுரைவீரன் பிறந்த ஊரான பெரம்பலூர் மாவட்டம் பொம்மனப்பாடி கிராமத்தில் அரசு சார்பில் மணிமண்டபமும், திருச்சி, மதுரையில் அவருக்கு உருவச் சிலையும் அமைக்க அரசு விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும். நெல்லையில் தயாராகி வரும் ஒண்டிவீரன் மணிமண்டபப் பணிகளை விரைந்து முடிக்க வேண்டும்.சாதி மறுப்பு திருமணம், காதல் திருமணம் செய்பவர்களுக்கு எதிராக கவுரவக் கொலையில் ஈடுபடும் குற்றவாளிகளை கைது செய்ய வேண்டும்.

### 6 சதவீத இட ஒதுக்கீடு

தமிழகத்தில் 50 லட்சம் அருந்ததியர் உள்ளனர்அவர்களுக்கு இட ஒதுக்கீட்டை 3 சதவீதத்திலிருந்து 6 சதவீதமாக உயர்த்த வேண்டும். தமிழக அரசு பான்மசாலா, குட்கா போன்ற பொருட்களுக்கு தடை விதித்தது போல மதுக்கடைகளையும் மூட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு பேசினார்.

### மதுரைவீரன் பிறந்த ஊரில் மணிமண்டபம்

முதல் சாதி ஒழிப்பு போராளி மதுரைவீரன் பிறந்த ஊரான பெரம்பலூர் மாவட்டம் பொம்மணப்பாடியில் அரசு சார்பில் மணிமண்டபம் கட்டவும், திருச்சி-மதுரையிலும் மதுரைவீரனுக்கு முழு உருவச்சிலையும் அமைக்க அரசு ஆணையிடவேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.




மதுரை வீரன் உண்மை வரலாறு நூலை அதியமான் வெளியிட, திராவிடர் கழக மாநில தலைவர் கொளத்தூர் மணி நூலை பெற்றுக்கொண்டார்.

### ஆதித்தமிழன் நன்கொடை விபரம்

| | |
|---|---|
| ஆண்டு நன்கொடை | - ரூ. 100 |
| வாழ்நாள் நன்கொடை | - ரூ.1000 |
| தனி இதழ் ரூபாய் | - ரூ.10 |

தொடர்புக்கு: 94430 59555

Printed: Publisher and and Editor R.athiyamaan, No.713, mettupalayam salai, R.S.Puram, Coimbatore-2. Mobile: 94430 84642.
kavi Achagam, No.713, mettupalayam salai, R.S.Puram, Coimbatore-2

மின் அஞ்சல் தொடர்புக்கு : adhiyamaanperavai@gmail.com பேரவை செய்திகளை பார்க்க வலைதளம் :www.aathithamizharperavai.com